14th December 1959]

SRI A. A. RASHEED : Sir, have the Government given up the idea to form a separate zone for Madras and may I know the reason that weighed with the Government of India in not acceding to our request to form a separate zone?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of giving up this idea. I have already explained while replying to the debate on the Governor's Address the circumstances under which the Government of India are not agreeing to have the State constituted into a separate food zone.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, தென் உணவு மண்டலத்தைக் கலைத்து தனி மண்டலமாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசாங்கம் நிராகரித்ததானது இந்த அரசாங்கத்தை அவமதித்ததாகும் என்று இந்தச் சபையிலும் மேல்சபையிலும் சொல்லியிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த ராஜ்யத்தை மறுபடியும் தனிமண்டலமாக்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தப் போகிறதா? அல்லது மத்திய சர்க்காருடைய முடிவை ஏற்க முடிவு செய்து விட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி நான் இந்த மன்றத்திலே முன்பே விளக்கியிருக்கிறேன். மற்றொரு மன்றத்திலும் விளக்கியிருக்கிறேன். இதைத் தனி மண்டல மாக்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் மட்டும் முடிவு செய்வதல்ல. நான்கு தென் ராஜ்யங்களும் சேர்ந்தது இந்த உணவு மண்டலம். இந்தத் தென் உணவு மண்டலத்தை ஏற்படுத்தியது மத்திய அரசாங்கந்தான். ஆனால் இப்போது தனியாகப் பிரிய இரண்டு ராஜ்யங்கள் ஒப்புக்கொள் ளாதபோது மத்திய அரசாங்கத்தால் இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பிரிப்பதில் சங்கடம் இருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், தனியாகச் சென்னை இயங்குவதற்கு மத்திய சர்க்கார் இணங்காவிட்டாலும் எந்தக் காரணத்தினால் நாம் தென் மண்டலத்தில் இருந்து பிரியவேண்டு மென்று கோரினோமோ அதில் உள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க ஓரளவு மத்திய சர்க்கார் இணங்கினார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி யெல்லாம் மத்திய அரசாங்கத்தோடு கலந்து பேசப்பட்டு வருகிறது.

Rice and wheat

* 171 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to supplementary Question once No. 565, answered on the 4th March 1959—

(*a*) the total quantity of wheat allotted to the State by the Central Government in 1958; and

(*b*) the total quantity of rice allotted in 1957–58?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) No allotment of either wheat or rice was made during the years 1957 and 1958 by the Central Government to this State Government.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, ஒரிசா அரிசியை உண்ண மாட்டோம்; உத்திரப் பிரதேச கோதுமையை வாங்க மாட்டோம்; பஞ்சாப் பருப்பை பார்க்கவே மாட்டோம் என்று பிரசாரம் செய்து வருகிற திராவிட மகரிஷிகளுக்குத் தனியாக அரசாங்கம் அரிசி தயார் செய்து கொடுக்கப் போகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ஏதும் பிரசாரம் நடைபெறுவதாகத் தெரியவில்லை. உணவு விஷயத்தில் யாரும் இந்த மாதிரிப் பிரசாரம் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the allotment was not made because we did not ask for it or whether it was not allotted in spite of our asking?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of allotment to this Government. There are dealers who get the allotment from the Central Pool.

Nagercoil Transport Depot

MR. SPEAKER. கேள்வி எண். 172. அங்கத்தினர் கனம் டி. எஸ். ராமசாமி சபையில் இல்லாததால் இந்தக் கேள்வியும் அதன் பதிலும் சட்டசபை நடவடிக்கைகளில் பிரசுரிக்கப்படும்.

* 172 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received any communication from the Chairman of the Estimates Committee (1958–59) regarding the storage of unaccountable petrol in the Nagercoil Transport Depot ; and

(b) the steps taken by the Government to take appropriate action against any irregularity?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) Necessary instructions were issued to the District Transportation Superintendent, Nagercoil to maintain proper account in respect of the fuel drained from vehicles.

Agriculture and Veterinary College

* 173 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயம், கால்நடைக் கல்லூரிகளுடைய போதனை முறைகளையும், ஆராய்ச்சிகளையும் அதிகப்படுத்துவதற்காக அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்புக் குழுவால் உதவி செய்யப்பட்டத் தொகையிலிருந்து சென்னை ராஜ்யத்திலுள்ள எந்தெந்த கல்லூரிகளுக்கு எவ்வளவு உதவி அளிக்கப்பட்டது?